<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 04.03.2025

**அசல் வழக்கு எண் 136/ 2022**

**வா.சா.** 1 **- முருகன், த/பெ. வடிவேல்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நீங்கள் எந்த ஊரில் குடி இருக்கிறீர்கள் என்றால் ராணிப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். எவ்வளவு ஆண்டுகளாக குடியிருந்து வருகிறீர்கள் என்றால் கடந்த **1999** முதல் குடி இருந்து வருகிறேன். உங்கள் அப்பா இறக்கும் வரை உங்கள் தம்பி சண்முகம் வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். உத்திரமேரூரில் வசித்து வந்தார் என்றால் சரிதான். நீங்கள் வழக்கில் வரைபடம் தாக்கல் செய்து உள்ளீர்கள் அதில் பாகப்பிரிவினையில் **H** பாகம் உங்கள் அப்பாவிற்கு பாகப்பிரிவினை வாயிலாக வந்தது என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை வாயிலாக உங்கள் அப்பாவிற்கு சொத்து வந்ததால் அது அவருடைய தனிப்பட்ட சொத்தாகும் என்று சொன்னால் சரி இல்லை நீங்கள் கூறுவது போல் மூதாதையர் சொத்து என்று கருத முடியாது என்று சொன்னால் சரி இல்லை. உங்கள் அப்பா இறந்த பொழுது சொத்து குறித்து எந்த முன்னேற்படும் செய்யாமல் இறந்து விட்டார் என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான் ஆனால் உங்கள் தந்தையார் கடந்த **17.01.1979** அன்று இந்த சொத்து சம்பந்தமாக ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியில்லை. உங்கள் தந்தையார் உத்தரமேரூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் உயில் ஆவணம் எண் **48/1979** பதிவு செய்து வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் இந்த வழக்கில் வா.சா.ஆ **7** ஆக உத்திரமேரூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் எந்த ஒரு ஆவணமும் இல்லை என்று ஒரு ஆவணம் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை உங்கள் வழக்கறிஞர் மனுசெய்து வாங்கி உள்ளார் என்றால் நான் தான் வாங்கினேன். வழக்கறிஞர் எழுதி கொடுத்தார் நான் வாங்கி வந்து கொடுத்தேன். அந்த கடிதத்தில் பெறுநர் என்கிற இடத்தில் வழக்கறிஞர் பெயர் உள்ளது என்றால் சரிதான். கிரைய

சம்பந்தப்பட்ட ஆவணங்கள் புத்தகம் **1** லும் உயில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் புத்தகம் **3** லும் பதிவு செய்யப்படும் பவர் பத்திரம் புத்தகம் **4** லும் பதிவு செய்யப்படும் அது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாசா.ஆ **7** ல் புத்தகம் **4** என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் ஆவணம் புத்தகம் **3** ல் எழுதப்படும் உங்கள் வழக்கறிஞர் என்ன மனு கொடுத்து ஆவணம் கூறினார் என்கிற மனுவினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . வழக்கு சொத்து உயிலில் உங்கள் தந்தையார் சண்முகம், முருகன், கிருஷ்ணன் ஆகிய மூவருக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்று எழுதியுள்ளார் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. உங்களுடைய அவசர தேவைக்காக உங்களுடைய பாகத்திற்காக நீங்களும் கிருஷ்ணன் என்பவரும் செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக் கொண்டீர்கள் என்றால் என் அப்பா எங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். வா.சா.ஆ **6** ல் அடங்கல் கணக்கு உங்கள் அண்ணன் கிருஷ்ணன் என்பவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். சண்முகம் என்பவருக்கு பணம் தேவையில்லை என்கிற காரணத்தினால் உயிலின் மூலம் அவருக்கு கிடைத்த சொத்தினை அவர் அப்படியே வைத்திருந்தார் என்று சொன்னால் சரி இல்லை. உங்கள் தந்தையார் இறந்த பிறகு நீங்கள் நால்வரும் கூட்டாக சொத்தினை அனுபவிக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. உங்கள் தம்பி சண்முகம் முதல் பிரதிவாதிக்கு அவருடைய பாகத்தை கிரயம் செய்து கொடுத்து விட்டார் என்கிற விவரம் உங்களுக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் நோட்டீஸ் கொடுத்த பிறகு தான் தெரியவந்தது. உங்கள் சகோதரர்கள் கிருஷ்ணன் மற்றும் பெருமாள் ஆகிய இருவரும் உங்கள் சகோதரர் சண்முகத்திற்கு ஒரு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் தெரியுமா என்றால் தெரியும் எந்த ஆண்டு எழுதிக் கொடுத்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. நோட்டீஸ் கொடுத்த பிறகு தான் அதுவும் தெரியும். மேற்படி விவரங்கள் **2007** லேயே உங்களுக்கு தெரியும் வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. தாவா சொத்தில் முதல்

பிரதிவாதி குடியிருந்து வருகிறார் அவர் தான் சொத்துக்கான வீட்டு வரி ரசீதுகளை கட்டி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. **2007** விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தது விவரங்கள் உங்களுக்கு தெரியும் தற்போது பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தில் இந்த வழக்கில் தாக்கல் செய்து நடத்தி வருகிறீர்கள் என்றால் சரியில்லை. உங்கள் தந்தையார் உங்களுக்கு தேவையான சொத்துக்களை செட்டில்மெண்ட் வாயிலாக ஏற்கனவே ஒதுக்கி கொடுத்து விட்டார் நீங்கள் பணம் பறிக்க வேண்டும் என்கிற உள்நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறீர்கள் என்றால் சரியில்லை. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T. Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.